***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 186 /2015 – P.W. 1(LW1 )***

| | |
|---|---|
| *Name* | சேகர் |
| *Father/Husband's Name* | த/பெ. முனியன் |
| *Village* | புதுக்கோட்டை , தெற்கு நத்தம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *40* |

*1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. .* **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் 2ம் எதிரியை தெரியும்.

2. கடந்த 2015 ஆம் வருடம், 8வது மாதம் , தேதி ஞாபகம் இல்லை. எனது ஊரான தெற்கு நத்தத்தில் உள்ள தண்ணீர்டேங்கில் தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமாக எங்கள் தெருக்காரர்களுக்கிடையே பிரச்சனை நடந்தது , அப்போது காலை 9.30 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்தபோது எனது மனைவி மற்றும் தெருக்காரர்கள் தண்ணீர் டேங்க் பிரச்சனை சம்பந்தமாக என்னிடம் வந்து கூறினார்கள். அது குறித்து தண்ணீர் டேங்க் ஆப்பரேட்டரான 1வது எதிரி சங்கரிடம் நான் சென்று தண்ணீர் திறந்து விடுவது குறித்து கேட்டபோது நான் என் இஷ்டத்துக்குதான் தண்ணீர் திறந்து விடுவனே் என்றும், உன் இஷ்டத்துக்கு திறந்து விடமுடியாது என்று கூறி குச்சிக்காரி தேவடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் அசிங்கமாக திட்டி, அங்கிருந்த அருவாளால் 2வது எதிரி ராமச்சந்திரன் என்னை வெட்ட முயற்சிக்கவே 1வது எதிரி அந்த அருவாளை பிடுங்கி என்னை எனது வலது தோல்பட்டையில் வெட்டினார், ( சாட்சி தனது தோல்பட்டையை காட்டி அருவாளால் வெட்டிய தழும்பை காட்டினார்.) அப்போது அதை தடுக்க வந்த கோபு என்பவரையும் 1வது எதிரி வலது தலைப்பகுதியில் அருவாளால் வெட்டினார். மேலும் 2வது எதிரி

என்னை கம்பால் வலது பக்க தலையில் அடித்ததில் காயம் ஏற்பட்டது. மேலும் என்னை அருவாளை காட்டி கொன்று விடுவேன் என்று மிரட்டினார். மேற்படி சம்பவத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் என்னை விசாரித்தனர். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பபமும் என்னுடையததுான். **மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 186 /2015 – P.W. 2 (LW2 )***

| | |
|---|---|
| *Name* | கோபு |
| *Father/Husband's Name* | த/பெ. சண்முகம் |
| *Village* | புதுக்கோட்டை , தெற்கு நத்தம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 55 |

*1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. .* **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் 2ம் எதிரியை தெரியும்.

2. கடந்த 02.08.2015 ஆம் தேதியன்று எனது ஊரான தெற்கு நத்தத்தில் உள்ள தண்ணீர்டேங்கில் தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமாக எங்கள் தெருக்காரர்களுக்கிடையே பிரச்சனை நடந்தது , அப்போது காலை 9.30 மணியளவில் நானும் , அசா1ம் தண்ணீர் திறந்து விடுவது குறித்து தண்ணீர் டேங்க் ஆப்பரேட்டரான 1வது எதிரியிடம் சென்று கேட்டோம் அதற்கு 1வது எதிரி நான் திறந்து விடும்போதுதான் தண்ணீர்பிடிக்கவேண்டும், உங்க இஷ்டத்துக்க தண்ணீர் திறந்து விட முடியாது என்று கூறி குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று கொச்சை வார்த்தைகளால் என்னை பேசினார். அப்போது 2 வது எதிரி ராமச்சந்திரன் கையில் அருவாள் வைத்திருந்தார். அதை பிடுங்கி 1வது எதிரி அசா 1ஐ வலது தோல்பட்டை மணிக்கட்டில் வெட்டிவிட்டார். நான் சென்று அதை தடுத்தபோது நீ என்ன சப்போட்டா என்று என்னை திட்டி , 1வது எதிரி அருவாளின் பின்பகுதியால் எனது வலது பக்க தலையில் அடித்து விட்டார். ( சாட்சி தன்னுடைய வலது பக்க தலையில் ஏற்பட்ட காயத்தழும்பை திறந்த நீதிமன்றத்தில் காட்டுகிறார். ) அப்போது 1ம் எதிரியின் அண்ணனான ராமச்சந்திரன் எங்களை கம்பால் அடிக்க முயன்றபோது அந்த அடி 1வது எதிரியின் தோல்பட்டையிலேயே

பட்டுவிட்டது. அப்போது எதிரிகள் இதற்கு மேல் எங்களிடம் பேசினீர்கள்ள ன்றால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள். எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்தால் ரத்தம் வந்ததால் உடனடியாக நானும், அசா1ம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/—ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 186 /2015 – P.W. 3(LW4 )***

| | |
|---|---|
| *Name* | பெருமாள் |
| *Father/Husband's Name* | த/பெ. ஜெயராமன் |
| *Village* | வடுவூர் புதுக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 53 |

*1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. .* **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் 2ம் எதிரியை தெரியும். அவர்கள் தெற்கு நத்தத்தை சேர்ந்தவர்கள் .

2. கடந்த 2015 ஆம் வருடம் 8வது மாதம் , தேதி ஞாபகம் இல்லை. நான் எனது ஊரிலிருந்து தெற்கு நத்தத்தில் உள்ள எனது வயலுக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது தண்ணீர் டேங்க் அருகே சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தேன். அப்போது எனது அருகில் கோபுவும் இருந்தார். அப்போது மேற்கே உள்ள தண்ணீர் டேங்க்கிலிருந்து 1வது எதிரி வந்தார். தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமாக அங்கு பிச்சனை நடந்தது. அப்போது அருவாளுடன் வந்த 1வது எதிரி அசா1 ஐ வலது தோல்பட்டையில் வெட்டி விட்டார். பின்னர் , கோபுவை அருவாளின் பின்பகுதியால் வலது தலையில் அடித்து விட்டார். பிறகு நான் கோபுவையும், அசா 1 மற்றொரு வண்டியிலும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம். சம்பவம் குறித்து போலீசார் என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/—ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 186 /2015 – P.W. 4(LW5)***

| | |
|---|---|
| *Name* | நாகராஜ் |
| *Father/Husband's Name* | த/பெ. கணேஷ் |
| *Village* | வடுவூர் புதுக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 43 |

*1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. .* **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் 2ம் எதிரியை தெரியும். அசா1 மற்றும் அசா 2 ஐ தெரியும்.

2.என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். தெற்கு நத்தத்தில் உள்ள வாட்டர் டேங்கில் தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமான பிரச்சனை தொடர்பாக நான் வேலைக்கு சென்று விட்டு மதியம் வந்து கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், செல்வம் முன்னிலையிலும் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் , செல்வமும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகசர் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.